FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | பொருளியல் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- **உபபிரிவு "அ", உபபிரிவு "ஆ" ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## உபபிரிவு "அ"

01) (i) பொருளாதார வளங்களை விளக்கி, அதனை எவ்வாறு வகைப்படுத்துவீர் எனக் காட்டுக. (4 புள்ளி)

(ii) சமூகங்கள் எதிர்நோக்கும் "தெரிவுப் பிரச்சனை" என்பது யாது? அதற்குரிய காரணங்கள் எவை? (5 புள்ளி)

(iii) கட்டளைப் பொருளாதாரம், சமூக சந்தைப் பொருளாதாரம் ஆகியவற்றுக்கிடையில் ஏதும் ஒற்றுமை, வேற்றுமைகளுண்டா? விளக்குக. (4 புள்ளி)

(iv) உற்பத்தி வளங்களை ஒதுக்கீடு செய்வதில் விலைமுறைமை செயற்படும் விதத்தினை விளக்குக. (4 புள்ளி)

(v) "பொருளியற் செலவு" என்றால் என்ன? அதன் உள்ளடக்கங்கள் எவை? (3 புள்ளி)

02) (i) நிறைபோட்டிச் சந்தையில் விற்கப்படும் ஓர் பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை? (4 புள்ளி)

(ii) குறைந்த விலையானது கேள்வித் தொகையினை ஏன் அதிகரிக்கச் செய்கின்றது? இரு காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

(iii) நெகிழ்வற்ற நிரம்பற் பொருள் மீது அலகு மானியமொன்றை உற்பத்தியாளர் மீது அரசு வழங்குமாயின் பெரும்பகுதி மானிய நன்மையினை யார் அடைந்து கொள்வார்? பொருத்தமான வரைபடமொன்றைப் பயன்படுத்தி விளக்குக. (4 புள்ளி)

(iv) பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் சந்தைக் கேள்வி, சந்தை நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றன.

$$Qd = 400 - 10p\ , \quad Qs = -100 + 10p$$

அ) சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தை சமநிலை விலையையும் சமநிலை தொகையையும் கணிப்பிட்டு அதனை வரைபொன்றில் வரைந்து காட்டுக. (3 புள்ளி)

ஆ) சந்தை சமநிலையின் போது உற்பத்தியாளர் மிகையையும் நுகர்வோர் மிகையையும் கணிப்பிட்டு அதனை வரைபொன்றில் வரைந்து காட்டுக. (3 புள்ளி)

03) (i) நிறைபோட்டிச் சந்தையின் பண்புகளுடன் தனியுரிமை போட்டிச் சந்தையின் பண்புகள் எவை ஒத்துப் போகின்றன? எவை வேறுபடுகின்றன? (4 புள்ளி)

(ii) பொருளியலில் சாதாரண இலாபம் என்பதனை விளக்குக. எச் செலவினுள் அது உள்ளடக்கப்படுகின்றது? (4 புள்ளி)

(iii) விலையை ஏற்கும் ஓர் உற்பத்தி நிறுவனம் சாதாரண இலாபத்தினை உழைக்கும் நிலைமையினை வரிப்படமொன்றின் உதவியுடன் விளக்குக. (4 புள்ளி)

(iv) குறுங்கால உற்பத்தி தொழிற்பாட்டில் எல்லைச் செலவு, எல்லை உற்பத்தி என்பவற்றுக் கிடையில் ஏதாவது தொடர்புகள் உண்டா? விளக்குக. (4 புள்ளி)

(v) குறுங்காலத்தில் விலையினை ஏற்கும் உற்பத்தி நிறுவனம் ஒன்று 200 அலகுகளை உற்பத்தி செய்வதாகவும், அதன் விற்பனை அலகொன்றின் விலை 50 ரூபாவாகவும் கருதுக. 200 அலகு வெளியீட்டில் சராசரி மொத்தச் செலவு 40 ரூபாவும், சராசரி மாறும் செலவு 30 ரூபாவும் ஆகும்.

அ) குறுங்காலத்தில் நிறுவனம் அடைகின்ற இலாபத்தின் அளவு யாது? (2 புள்ளி)

ஆ) இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு மற்றும் மொத்த மாறும் செலவு என்பவற்றின் அளவு யாது? (2 புள்ளி)

04) (i) தேசிய வருமானப் புள்ளிவிபரங்களின் அனுகூலங்கள் யாவை? (4 புள்ளி)

(ii) தேசிய உற்பத்திக் கணிப்பீட்டில் இடம்பெறும் "இரட்டைக் கணிப்பீட்டுப் பிரச்சனை" என்பதனை உதாரணம் தந்து விளக்குக. (4 புள்ளி)

(iii) தேசிய வருமானக் கணிப்பீட்டின் வரையறைகள் யாவை? (4 புள்ளி)

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன. (யாவும் பில்லியன் ரூபா)

| வகை | பெறுமதி |
|---|---|
| தேறிய வெளிநாட்டு நடை முறை மாற்றல்கள் | 50 |
| தேறிய மறைமுக வரிகள் | 150 |
| தேசிய சேமிப்புக்கள் | 500 |
| தேறிய ஏற்றுமதிகள் | 200 |
| தேறிய வெளிநாட்டு காரணி வருவாய் | 100 |

| வகை | பெறுமதி |
|---|---|
| அரசாங்கத்திலிருந்தான வீட்டுத் துறைக்கான மாற்றல்கள் | 200 |
| அரசாங்க கொள்வனவுகள் | 100 |
| தனியார் நுகர்வுச் செலவீடு | 300 |
| பகிரப்படா இலாபம் | 80 |
| பெறுமானத் தேய்வு | 100 |

மேலேயுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) மொத்த உள்நாட்டு முதலீடு (2 புள்ளி)

ஆ) சந்தைவிலை மொத்த உள்நாட்டுற்பத்தி (2 புள்ளி)

இ) தேசிய வருமானம் (2 புள்ளி)

ஈ) தனியார் வருமானம் (2 புள்ளி)

05) (i) பின்வரும் நுகர்வு அட்டவணையினைக் கருத்திற் கொள்க.

| வருமானம் $(y)$ | நுகர்வு $(C)$ |
|---|---|
| 2000 | 2200 |
| 4000 | 3800 |
| 6000 | 5400 |

மேற்படி அட்டவணையினைப் பயன்படுத்தி நுகர்வு மற்றும் சேமிப்பு சார்புகளைக் கணிக்குக. (4 புள்ளி)

(ii) சமநிலைத் தேசிய வருமான மட்டத்தினை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. (5 புள்ளி)

(iii) முதலீட்டுப் பெருக்கிக்கும் சமநிலை வருமான மட்டத்திற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (4 புள்ளி)

(iv) மூடிய பொருளாதாரமொன்றினது பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகள் தரப்பட்டுள்ளன. (சகல தரவுகளும் பில்லியன் ரூபாய்களில்)

நுகரிவு $(C)$ = $250 + 0.8yd$

முதலீடு $(I)$ = 150

அரசாங்க கொள்வனவு $(G)$ = 200

வரிகள் = 100

அரசாங்கத்திலிருந்து வீட்டுத்துறைக்கான மாற்றல் = 50

அ) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தைக் கணிக்குக. (2 புள்ளி)

ஆ) அரசாங்கம் வரிகளை 50 பில்லியனால் உயர்த்துமாயின் சமநிலை வருமான மட்டத்தில் ஏற்படும் மாற்றம் யாது? (2 புள்ளி)

இ) வரிப்பெருக்கிக் குணகத்தின் பெறுமதி யாது?

ஈ) அரசாங்கம் 3050 பில்லியன் தேசிய வருமான மட்டத்தினை எய்துவதற்கு முதலீடு எவ்வளவாக இருக்க வேண்டும்? (2 புள்ளி)

**உபபிரிவு "ஆ"**

06) (i) பண்டமாற்றுப் பொருளாதாரத்தின் "இரட்டைத் தேவைப் பொருத்தம்" என்பதனை உதாரணம் தந்து விளக்குக. (4 புள்ளி)

(ii) பொருளாதாரமொன்றில் பணத்திற்கான நிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகளை பட்டியற்படுத்துக. (4 புள்ளி)

(iii) கேள்வித் தூண்டல் பணவீக்கம் என்பதனை விளக்கி இப்பணவீக்கம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட இரு கோட்பாடுகளையும் குறிப்பிடுக. (4 புள்ளி)

(iv) உள்நாட்டுப் பணச் சந்தையில் உயர்மட்ட திரவத் தன்மை நிலவும் போது பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்க விளைவு யாது? திரவத் தன்மையைக் குறைப்பதற்கு மத்திய வங்கி மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவை? (4 புள்ளி)

(v) கற்பிதமான பொருளாதாரமொன்றின் பணவியல் தொடர்பான தரவுகள் கீழே தரப்படுகின்றன. (சகல தரவுகளும் ரூபா பில்லியனில் தரப்படுகின்றன)

| வகை | பெறுமதி |
|---|---|
| வணிக வளங்களிலுள்ள பொது மக்களது மொத்த வைப்புக்கள் | 1100 |
| பொது மக்களிடம் உள்ள புழக்கப் பணம் | 150 |
| பொதுமக்களின் பெயரில் வணிக வங்கியிலுள்ள தவணை வைப்புக்கள் | 250 |

| வகை | பெறுமதி |
|---|---|
| வணிக வங்கிகளில் உள்ள நாணயம் | 150 |
| மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கிகளின் வைப்புக்கள் | 100 |
| வணிக வங்கிகளிலுள்ள பொது மக்களது சேமிப்பு வைப்புக்கள் | 200 |

மேலேயுள்ள தரவுகளின் படி

அ) $(M_1)$ குறுகிய பணப் பெருக்கி யாது? (2 புள்ளி)

ஆ) மத்திய வங்கி 100 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களை வணிக வங்கிகளிடமிருந்து கொள்வனவு செய்யுமாயின் பண நிரம்பலில் $(M_1)$ ஏற்படும் மாற்றம் யாது? (2 புள்ளி)

07) (i) தற்போது இலங்கையில் காணப்படுகின்ற நிதியிடை நிறுவனங்கள் யாவை? (5 புள்ளி)

(ii) வணிக வங்கிகளின் கடனாகச் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்ற மாறிகள் எவை? (4 புள்ளி)

(iii) இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள் எவை? நிதியியல் முறைமையின் உறுதி நிலையைப் பேணுவதற்கு மத்திய வங்கி கையாளும் நடவடிக்கைகள் எவை? (5 புள்ளி)

(iv) வங்கித் தொழில் முறையில் இயங்கும் வங்கியொன்றினது ஐந்தொகை வருமாறு

| பொறுப்புக்கள் | பெறுமதி மில்லியன் |
|---|---|
| வைப்புக்கள் | 10,000 |
| மொத்தம் | 10,000 |

| சொத்துக்கள் | பெறுமதி மில்லியன் |
|---|---|
| ஒதுக்கம் | 1300 |
| உண்டியல்கள் | 200 |
| கடன்கள் | 8500 |
| மொத்தம் | 10,000 |

வங்கி 500 மில்லியன் மிகை ஒதுக்குகளைப் பேணுகின்றன எனவும் பொதுமக்கள் வசம் 400 மில்லியன் ரூபா தாள் குற்றி நாணயங்களும் காணப்படுகின்றன எனவும் கருதுக.

அ) வைப்பாக்கப் பெருக்கிக் குணகம் யாது? (2 புள்ளி)

ஆ) வங்கி மிகை ஒதுக்குகளைக் கடனாக வழங்குமாயின் புதிய வைப்புக்களின் அளவு யாது? (2 புள்ளி)

இ) வங்கியின் கடன் காரணமாக நாட்டின் புதிய பண நிரம்பல் மட்டம் யாது? (2 புள்ளி)

08) (i) பொருத்தமான உதாரணங்களுடன் வெளிவாரிச் செலவுகள் ($External\ Cost$) தனியார் செலவுகள், சமூகச் செலவுகள் ($Social\ Cost$) என்பவற்றை விளக்குக. (5 புள்ளி)

(ii) தாராள சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் பங்களிப்பு ஏன் அவசிய மானதாகின்றது? (4 புள்ளி)

(iii) வருமானச் சமமின்மையினை நீக்கக்கூடிய வழிமுறைகளில் பொதுப் பொருளாதாரத்தினை எவ்வாறு பயன்படுத்தலாம்? (5 புள்ளி)

(iv) பின்வருவனவற்றிற்கு உதாரணங்கள் தந்து வரைபட ரீதியாக விளக்குக.

அ) நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு (2 புள்ளி)

ஆ) உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு (2 புள்ளி)

இ) நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு (2 புள்ளி)

09) (i) அரசாங்கத் தோல்வி ($Government\ failure$) என்பதன் கருத்து யாது? அதனைப் பிரதிபலிக்கும் விடயங்கள் எவை? (4 புள்ளி)

(ii) இலங்கையில் அண்மைக் காலத்தில் பாதீட்டுக் குறைநிலையினை நிதியீட்டம் செய்யப் பயன்படுத்தப்பட்ட மூலாதாரங்கள் யாவை? (4 புள்ளி)

(iii) அரச பாதீட்டின் நடைமுறைச் செலவின் உள்ளடக்கங்கள் யாவை? பொருளாதார பகுப்பின் அடிப்படையில் அவற்றின் பங்களிப்பு யாது? (6 புள்ளி)

(iv) பொதுப்பண்டம், பொதுவளம் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு யாது? (4 புள்ளி)

(v) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| வகை | தொகை மில்லியன் ரூபா |
|---|---|
| வரி வருமானம் | 8000 |
| வரியல்லா வருமானம் | 1000 |
| நன்கொடைகள் | 2000 |
| மொத்தக் கொடுப்பனவுகள் | 16000 |

மேற்படி தரவுகளின் படி மொத்த பாதீட்டு நிலுவையைக் கணிப்பிடுக. (2 புள்ளி)

10) (i) வரிவிதிப்பு முறையில் நியாயத்துவம் என்பதனாற் கருதப்படுவது யாது? (4 புள்ளி)

(ii) வரி விதிப்பின் தத்துவங்கள் எவை? (4 புள்ளி)

(iii) பொதுப்பண்டங்களை அரசு உற்பத்தி செய்து வழங்குவது ஏன்? (4 புள்ளி)

(iv) புற நன்மைகள் உள்ள நிலையில் சந்தை முறைமை ஏன் தோல்வியடைகின்றது? பொருத்தமான வரைபடத்துடன் விளக்குக. (4 புள்ளி)

(v) தாராள சந்தை முறைமை வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதில் ஏன் தவறுகின்றன? (4 புள்ளி)